**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, AVINASHI.**

Judicial form No.53
(See Rule 42)

DEPOSITION OF WITNESS

**CC.No.188/2024**

PW-2

| | | | |
|---|---|---|---|
| Name | வினோத்குமார்(PW2) | | |
| Father's Name | சிவக்குமார் | தொழில் | சூப்பர் மார்க்கெட் ஊழியர் |
| Village | கருவலூர் | | |
| Taluk | அவிநாசி | Age | **26** |
| District | திருப்பூர் | | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 07th **day of April 2026** by Thiru. K. Kulanthaivel, Magistrate Clerk, JM Court, Avinashi by following the direction of Officer of this Court.

*(Accused Present)*

**முதல் விசாரணை:-**

நான் மேற்படி முகவரியில் குடியிருந்து கொண்டு சூப்பர் மார்க்கெட்டில் வேலை செய்து வருகிறேன். கடந்த 13.3.24 ஆம் வருடம் இரவு 09.30 அளவில் நான் கடையை க்ளோஸ் செய்தேன். மறுநாள் காலை 6:00 மணி அளவில் எப்பவும் போல் கடையை திறந்து பார்த்தபோது தொலைபேசியும் கல்லாப்பெட்டியில் ரூபாய் 2000 காணாமல் போய் இருந்தது. என்ன நடந்தது என்பதை பார்ப்பதற்காக கடையை சுற்றி பார்த்த போது பின்னால் இருந்த கடைக்கு மேல் பக்கம் போட்டிருந்த ரூபிங் ஷீட் பிரிக்கப்பட்டிருந்ததை தெரிந்து கொண்டேன். அதன் பின்பு நான் என் முதலாளிக்கு போன் செய்து தகவல் சொன்னேன். அதன்பின்பு போலீசார் சம்பவ இடம் வந்து விசாரணை செய்தார்கள். விசாரணை செய்த பின்பு வரைபடம் வரைந்தார்கள் அதில் நானும் என்னுடன் பணிபுரியும் கணேஷ் என்பவரும் கையொப்பம் செய்தோம். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையதுதான். அந்த கையொப்பம் அ.சா.ஆ.2 ஆகக் குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரித்தனர்.

**குறுக்கு விசாரணை எதிரி தரப்பில் :**

போலீஸ் விசாரணையில் சொன்ன தகவலை தான் நான் முதல் விசாரணையில் சொல்லி உள்ளேன். நான்தான் என் முதலாளிக்கு தகவல் சொன்னேன் என்றால் சரிதான். போலீசார் மாலை 4 மணி அளவில் சம்பவ இடத்திற்கு வந்தார்கள். புகார் கொடுப்பதற்காக நான் காவல் நிலையம் சென்றேனா என்றால் இல்லை. போலீசார் கையொப்பம் பெற்ற தாளில் என்ன விபரம் உள்ளது என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் சம்பவத்தைப் பற்றி எழுதினார்கள் அதில் என்னிடம் கையொப்பம்

பெற்றார்கள். வரைபடம் வரைந்ததில் கையொப்பம் பெற்றார்களா என்றால் இல்லை. நான் கையொப்பம் செய்த தாளில் கடையின் உயரம் எவ்வளவு என்று உள்ளதா என்றால் இல்லை. நான் சம்பவ இடத்தில் கையொப்பம் செய்யவில்லை என்றும் நான் என் முதலாளி கேட்டுக் கொண்டதற்கு நாங்கள் காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்துவிட்டு தற்போது நீதிமன்றத்தில் கடையில் வைத்து கையொப்பம் செய்ததாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணைஇல்லை:**

| | |
|---|---|
| சாட்சியின் கையொப்பம் | திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.<br><br>(Sd.) N.Keerthana<br>குற்றவியல் நீதித்துறை நடுவர், அவிநாசி. |